**இமதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இமதுவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிப்புக்கப்பட்டன.

(அ) உள்ளுராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 38,229,239 கூட்டுத்தொகையான 6 வாகனங்களின் பெறுமதி, 10 பலநோக்கு நடமாடும் கூடங்கள் மற்றும் ரூபா 498,150 பெறுமதியான 450 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உறுப்பினர் படிகள் ரூபா 92,740 குறைத்தும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 25,296 கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,286,185 ஆன முத்திரைக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 754,280 தொகை மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 744,380 ஆன நிலையான சொத்துக்கள் மற்றும் காணி ஏலவிற்பனைகளிலிருந்து சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த 03 காணித்துண்டுகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ரூபா 7,399,024 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய துணைப் பதிவேடுகள் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 158,106 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாற்றமுராமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்படும் ரூபா 162,850 கூட்டுத்தொகையான 03 பெறவேண்டிய மீதிகள், 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலவும் ரூபா 38,475 தொகையான பெறவேண்டிய மீதியொன்று மற்றும் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் நிலுவை வருமான கணக்கில் ரூபா 42,792,127 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் காணப்பட்ட போதிலும் அவற்றைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தே நிதிக்கூற்றுக்களில் மாற்றமுராமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்படும் ரூபா 9,520 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதி மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 46,224,497 கூட்டுத்தொகையான நிர்மாண வேலைக் கணக்கின் மீதி உட்பட ரூபா 1,457,799 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் கணக்கின் மீதிகள் என்பவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 35,511,361 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டில்கள், தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் அணிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகளும் ரூபா 101,579,234 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகளும், காலப்பகுப்பாய்வும், மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபா 6,666,091 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மற்றும் நானாவித வைப்புக்கள் தொடர்பான காலப்பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட வைப்புப் பதிவேடுகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விட குறைந்த மீண்டுவரும் வருமானம் ரூபா 1,254,889 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்ரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விட குறைந்த வருமானம் ரூபா 3,111,522 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,856,633 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானத்தினை மிகைத்து ரூபா 1,254,889 ஆன மீண்டெழும் செலவினம் காணப்பட்டமையால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு ஆகிய இரு ஆண்டுகளிலும் வருமானத்திற்கான உதவிகள், சுய உழைப்பு வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது விபரப் பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உழைப்பு வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 38,888,951 | 26,046,376 | 12,842,575 | 40,143,840 | 27,301,265 |
| 2014 | 24,707,003 | 14,862,248 | 9,844,755 | 21,818,525 | 17,973,770 |
| 2013 | 23,104,576 | 12,226,270 | 10,878,306 | 21,893,082 | 11,014,776 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டின் போது சுயவருமானமீட்டல் வருமானம் இரண்டு மடங்காலும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மூன்று மடங்காலும் மீண்டெழும் செலவினம் அதிகரித்திருத்த போதிலும், அந்நிலைமை இனங்காணப்பட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சபைக்கு வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு இயலுமையும் இல்லையென தென்பட்ட போதும், செலவினத்தைக் குறைப்பது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் மூலதன வருமானத்தை மிகைத்து ரூபா 1,627,173 ரூபா ஆன மூலதனச் செலவினம் செலவிடப்பட்டிருந்ததுடன், பாதீட்டின் பிரகாரம் மூலதன வருமானத்தை மிகைத்த ரூபா 5,555,000 ஆன மூலதனச் செலவினத்திற்காக நிதியளிக்கப்பட்ட முறை தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 393,249 ஆன வீதவரியில் 21 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிடுவது தொடர்பில் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின இறுதியில் ரூபா 56,608 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டினுள் ரூபா 762 மாத்திரமான குறைந்த பெறுமதியே அறவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிடுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கழிவுப்பொருள் வரி

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 300,000 ஆன கழிவுப்பொருள் வரியில் ரூபா 191,650 அறவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 64 சதவீதமான பெறுமதியைக் கொண்டிருந்தது. நிலுவை வரியை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறையொன்றை தயாரித்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 280,666 ஆன அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 852,950 ஆன வியாபார வரி என்பவற்றிலிருந்து ரூபா 593,800

அறவிடப்பட்டிருந்தன. நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 372,261 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,600,000 உம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மீளாய்வு

மீளாய்வாண்டின் பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினத்தை உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடும் போது சபையின் ஒவ்வொரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு, அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதில் பின்னடைந்த நிலைமையொன்று தென்பட்டதுடன் அது சபையினதும் சபை அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு ஏற்பட்ட நட்டமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணியினத் திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சிய 26 பேருக்கும் அங்கீகரிக்கப்படாத பதவிகளில் 10 பேருமாக மிகை பதவியணியினர் எண்ணிக்கை 36 ஆக இருந்தது. எவ்வாறாயினும் பதவியணியினரை முறைப்படுத்துவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 01 முதல் 08 ஆண்டுகள் வரையான காலமாக அறவீடுகள் நிலுவையாக காணப்படும் 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 52,698 தொகையான கடன் மீதியை அறவிடுவது தொடர்பாக இலங்கை சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஏப்ரல் 15 ஆந் திகதி சொத்துக்கள் பொறுப்புக்கள் பகிர்ந்தளித்தல் குழுவின் பரிந்துரையின் பேரில் ஹபராதுவ பிரதேச சபையால் இமதுல பிரதேச சபைக்கு கையளிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 9,794,393 சொத்துக்களையும் ரூபா 2,051,704 பொறுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 மே 18 ஆந் திகதி வரையிலும் உரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்ட ரீதியாக சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக ரூபா 780,000 வருடாந்த குத்தகைப் பணத்தின் பேரில் போகஹகொட திங்கட்கிழமை குத்தகைக்கு வழங்குவதற்காக சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் சபையினால் ரூபா 148,000 மிகை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 போகஹகொட வாரச்சந்தையை நிர்மாணிப்பதற்காக காணியை கையேற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) போகஹகொட வாரச்சந்தையை நிர்மாணிப்பதற்கான காணியை கையேற்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வயல் காணி ரூபா 2,850,000 இற்கு, விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் காணி கையேற்றலுக்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 2,280,000 உம் சபை நிதியத்திலிருந்து ரூபா 570,000 உமாக ரூபா 2,850,000 தொகை 2014 ஒக்தோபர் 20 ஆந் திகதி இமதுவ பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் அப்பணம் விளைவற்று காணப்பட்டது.

(ஆ) எனினும் கடன் தொகை பெற்றுக்கொண்ட திகதி முதல் ஒரு மாதத்திற்கு 6.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 178,590 வட்டித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

இமதுவ வியாபார கடை தொகுதி முன்னரங்கு மற்றும் சனசமூக மண்டபம் என்பவற்றை நிர்மாணிப்பது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) இந் நிர்மாணத்திற்குரிய ஒப்பந்தம் 2007 திசெம்பர் 17 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 22,156,800 இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2008 செப்தம்பர் 12 ஆந் திகதி அளவில் நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2015 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் கீழ் மாடியில் 12 கடைகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 11,654,060 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 20 கடைகளுக்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 7,641,525 தொகையான ஒரே தடவையில் பெறப்படும் குத்தகைப்பணம் குத்தகையாளர்களிடமிருந்து சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீண்டும் கடைகளை மேம்படுத்துவதற்கும் முன்னரங்கு சனசமூக மண்டபம் என்பவற்றுக்காக புறநெகும செயற்திட்டத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2014 ஏப்ரல் 22 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 6,452,393 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் காணியில் காணப்பட்ட மண்சரிவு நிலைமையின் பேரில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் நிறைவேற்றப்பட்ட வேலைக்காக ரூபா 3,914,260 ஆன நிறைவேற்றிய வேலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பணத் தொகை மற்றும் வேலை அறிக்கைக்கு இடையே வேறுபாடு ரூபா 2,538,125 தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டு ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

### 3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக 2015 நவம்பர் 13 ஆந் திகதி மேற்கொண்ட பரிசோதனையின் போது கழிவுப் பொருள் சேகரிப்பதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் காணியொன்று தெரிவு செய்யப்பட்டு அதற்கான செயற்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கிய செலவின விடயமொன்றில் ரூபா 1,122,859 கூட்டுத்தொகையான முழு ஏற்பாடும், மேலும் 05 செலவின விடயங்களில் ரூபா 13,773,184 கூட்டுத்தொகையான சேமிப்பும் ஏனைய 02 செலவின விடயங்களில் வரையரையை விஞ்சிய ரூபா 10,327,631 தொகையான செலவினமும், நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த செலவின விடயமொன்றின் கீழ் ரூபா 252,490 செலவினமும் 05 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 14,512,692 வருமானம் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ.வே ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படியுமாக ரூபா 422,831 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) சபையினால் நெனசல நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18,520 செலவினத்தை மேற்கொண்டு மின் உபகரணங்கள் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்த போதிலும், நெனசல நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலக வளவில் ரூபா 1,959,000 கிரயமான 03 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் பாதுகாப்பற்ற விதத்தில் காணப்பட்டன.

#### (ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்

2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தகனசாலை நிர்மாணத்திற்காக தனியார் கம்பனியொன்றுக்குரிய 10 ஏக்கர் காணி மற்றும் காணி ஏலவிற்பனைகளின் போது வழங்கப்பட்டிருந்த 03 துண்டுக் காணிகள் என்பவற்றை சபையினால் சட்டரீதியாக கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) மனிதவள முகாமைத்துவம்
(எ) வாகனக் கட்டுப்பாடு